சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **97 / 2017**

பெயர்: சுந்தரராஜன் வா.சா. 1 தேதி **13.02.2026**

இரண்டாவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. மணிகண்டன் என்பவருக்கும், வாதியின் அறக்கட்டளைக்கு தற்பொழுது ஏதாவது சம்மந்தம் உண்டா என்றால் மணிகண்டன் இறந்துவிட்டார். அவர் எப்பொழுது இறந்தார் என்றால் 2020ம் ஆண்டு இறந்தார். அவர் இறக்கும் வரை வாதி அறக்கட்டளையில் நிர்வாக டிரஸ்டியாக இருந்தார். மேற்படி வாதி அறக்கட்டளை தொடங்கிய சமயத்தில் நான் பொறுப்பில் இருந்தேனா என்றால் இல்லை. மேறப்டி அறக்கட்டளைக்கும், எனக்கு என்ன சம்மந்தம் என்றால் நான் செயலாளராக உள்ளேன். மேற்படி அறக்கட்டளையில் எப்பொழுது செயலாளராக வந்தேன் என்றால் 2021ம் ஆண்டில் வந்தேன். மேற்படி அறக்கட்டளையில் எத்தனை பேர் டிரஸ்டி என்றால் 6 பேர். மேற்படி அறக்கட்டளைக்கு நான் செயலாளராக வருவதற்கு முன்னர் மேற்படி வாதி அறக்கட்டளை நடைபெற்ற சங்கதிகள் பற்றி தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. வாதி தாக்கல் செய்துள்ள பிராதினை படித்து பார்த்துள்ளேன். வாதி தாக்கல் செய்த பிராதில் 4வது பேரால் மூன்றாவது வரியில் உள்ள சங்கதி சரியா என்றால் எனக்கு தெரியாது.

2. இரண்டாவது பிரதிவாதி தனலட்சுமிக்கும், குரு வித்யா பீடம் அறக்கட்டளைக்கும் என்ன சம்மந்தம் என்றால் அப்பொழுதில் இருந்து இப்பொழுது வரை எந்த சம்மந்தமும் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் இரண்டாவது பிரதிவாதி தாளாளர் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டாவது பிரதிவாதி எதற்காக இவ்வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் எங்களின் சுவாதீனத்தை தடை செய்ததாலும், காவல் துறையில் புகார் கொடுத்தாலும், மேற்படி வழக்கில் சேர்த்தோம். நான் தாக்கல் செய்துள்ள பிராதின் 5வது பத்தியில் முதல் வரியில் கூறியுள்ள சங்கதிக்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி 02.01.2005ம் தேதியன்று நடைபெற்றதாக கூறக்கூடிய கூட்டத்தில் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் தீர்மானத்தின் ஆவணத்தை பார்த்தேர்களா என்றால் பார்க்கவில்லை. மேற்படி ஆவணங்கள் எதுவும் தற்பொழுது கைவசம் உள்ளதா என்றால் இல்லை.

3. மேற்படி 02.01.2005ம் தேதியன்று முதல் பிரதிவாதி எவ்வித கூட்டத்தையும் நடத்தவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் வழக்கு சொத்தில் என்ன இருந்தது என்றால் எந்த விவசாயமும் செய்யாமல் தரிசாக கிடந்தது.

வழக்கு சொத்தில் 25 HP மின் மோட்டார் இருந்ததா என்றால் ஆயில் மோட்டார் இருந்தது. மேற்படி சங்கதி குறித்து பிராதில் கூறியது தவறு. மேற்படி வழக்கு சொத்து சம்மந்தமாக நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டாரா என்றால் இல்லை. அ.வ.249/2006 என்ற வழக்கில் ஆணையர் பார்வையிட்டாரா என்றால் பார்வையிட்டார். மேற்படி ஆணையர் மேற்படி வழக்கில் மேற்படி நிலத்தை பார்த்த சமயத்தில் என்ன இருந்தது என்றால் 30 ஏக்கர் கரும்பு, 20 ஏக்கர் முருங்கை மரம், 10 ஏக்கர் சூரியகாந்தி மற்றும் சிறுசிறு தாவரங்கள் இருந்தது. 1998ம் ஆண்டு அறக்கட்டளை தொடங்கப்பட்டது. மேற்படி அதன் நோக்கம் என்னவென்றால் மூலிகை மற்றும் மூலிகை செடிகள் வளர்த்து மருத்து தயாரிக்கவேண்டியதற்காக. கரும்பு, முருங்கை, சூர்யகாந்தி ஆகியவை மூலிகை செடிகளா என்றால் மூலிகை செடிகள் தான்.

4. அறக்கட்டளை ஆரம்பித்த காலகட்டத்தில் இருந்து நாளது தேதி வரை அறக்கட்டளை நோக்கத்திற்காக நாங்கள் ஏதேனும் செயல்கள் செய்தோமா என்றால் செய்துள்ளோம், கேன்சர், HIV, மஞ்சள்காமலை மற்றும் 21 வகையான நோய்களுக்கு மருத்து கண்டுபிடித்துள்ளோம். மேற்படி நோய்களுக்காக மூலிகை பயிரிட்டோமா என்றால் பயிரிட்டுள்ளோம். நான் சொன்ன 21 வகையான நோய்களுக்கு என்ன மூலிகை பயன்படுத்தினோம் என்றால் நிறைய மூலிகை செடிகள் பயன்படுத்தினோம்., என்ன மூலிகைகள் என்று ஓரளவுக்குசொல்லமுடியும். மேற்படி மூலிகைகள் எங்கு பயிரிடப்பட்டது என்றால் வழக்கு சொத்தில் தான் பயிரிடப்பட்டது. எந்த ஆண்டு என்றால் 2016 ம் ஆண்டுக்கு முன்னர் பயிரிட்டோம். அதற்கான ஆவணங்கள் எதுவும் உண்டா என்றால் இல்லை. மேற்படி மூலிகை பயிர்கள் பயிரிட்டதற்காக அறக்கட்டளையில் ஆவணங்கள் எதுவும் உண்டா என்றால் இருக்கலாம். வாதியின் அறக்கட்டளைக்கு எந்த ஆண்டில் இருந்து வருமான வரி செலுத்தப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

5. நான் பொறுப்பிற்கு வந்ததற்கு பின்னிட்டு வருமான வரிகணக்கு செலுத்தியுள்ளோமா என்றால் செலுத்தியுள்ளோம். மேற்படி சங்கதி குறித்து மேற்படி வருமான வரி கணக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதனை தாக்கல் செய்ய இயலுமா என்றால் கூட்டம் நடத்தி தான் முடிவு செய்ய முடியும். முதல் பிரதிவாதியின் அறக்கட்டளையின் ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். சமஸ்கிர்த பள்ளி முதல் பிரதிவாதியின் அறக்கட்டளையின் கீழ் நடைபெற்று வருகிறதா என்றால் தெரியாது. வா.சா.ஆ-6 மற்றும் 7 ஆவணங்கள் எதற்காக ஒரே நாளில் எழுதப்பட்டது என்றால் ராஜகோபால் என்பவர் சொன்னதன் அடிப்படையில் எழுதப்பட்டது. மேற்படி வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணத்தில் குத்தகை காலம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் வருடத்திற்கு ஒருமுறை குத்தகை செலுத்தவேண்டும்

என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் 16.06.2005ம் தேதியிட்டவை. வா.சா.ஆ.8 ஆவணத்தில் 10.08.2005ம் தேதி ரூ.5000/- குத்தகை செலுத்தப்பட்டுள்ளதாக ஏன் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்காக பணம் கொடுக்கப்பட்டது.

6. ராஜகோபாலுக்கு வழக்கு சொத்தை தவிர வேறு சொத்துக்கள் நங்கவரம் கிராமத்தில் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. வா.சா-ஆ.8 ஆவணத்தில் கண்டுள்ளவாறு தொகை எதுவும் ராஜகோபாலுக்கு தேவை ஏற்படாது என்றால் சரியல்ல. ராஜகோபால் பெரிய மிராசுதாரர் என்பதால் அவருக்கு மேற்படி தொகை தேவையில்லை என்றால் சரியல்ல. வா.சா-ஆ.8 ஆவணத்திற்கு பின்னிட்டு குத்தகை செலுத்தியதற்கான ஆவணங்கள் எதுவும் உண்டா என்றால் இல்லை. அறக்கட்டளையில் மூலமாக ஏதாவது ஒரு செயல்களுக்கு ரொக்க பணமாக கொடுப்பதற்கு அதிகாரம் உள்ளதா என்றால் 20,000/- வரை கொடுப்பதற்கு அதிகாரம் உள்ளது. அவ்வாறு பணம் கொடுக்கசுடிய சமாசாரங்களை வாதியின் அறக்கட்டளை கணக்குகளில் குறிப்பிடுவோமா என்றால் பார்த்தால் தான் சொல்ல இயலும். 2005ம் ஆண்டில் இருந்து நாளது தேதி வரை மேற்படி அறக்கட்டளைக்கு கணக்கு வைத்துள்ளோமா என்றால் வைத்துள்ளோம். இந்த வழக்கில் மொத்த குத்தகை பணத்தையும் செலுத்துவதற்கு நான் மனு செய்தோமா என்றால் செய்தோம்.

7. எந்த ஆண்டில் இருந்து குத்தகை பணம் செலுத்துவதற்கு மனு செய்தோம் என்றால் மணிகண்டன் இறந்ததற்கு பின்னிட்டு குத்தகை பணம் செலுத்துவதற்கு மனு செய்தோம். மணிகண்டன் இறப்பிற்கு முன்னர் குத்தகை பணம் செலுத்தியதற்காக ஆவணங்கள் எதுவும் உண்டா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணங்கள் கண்ட சொத்துகள் பக்கத்து பக்கத்தில் உள்ளதா என்றால் பக்கது பக்கத்தில் தான் உள்ளது. மேற்படி குத்தகை பணம் ரூ.5,000/- என்று எதன் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் ராஜகோபால் தான் நிர்ணயம் செய்தார். வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணங்கள் எழுதப்பட்ட சமயத்தில் வழக்கு சொத்தில் என்ன இருந்தது என்றால் தரிசு மற்றும் பாறையாக இருந்தது. மணிகண்டனின் சொந்த ஊர் என்றால் பரமத்திவேலூர். எங்களது அறக்கட்டளையின் மற்ற உறுப்பினர்கள் அக்காலகட்டத்தில் எந்த எந்த ஊரில் இருக்கிறார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி அறக்கட்டளையில் கண்டுள்ள உறுப்பினர்கள் குளித்தலை தாலுக்காவில் இருந்தார்களா என்றால் இல்லை.

8. மேற்படி சொத்தில் எப்பொழுது விவசாயம் செய்ய ஆரம்பிக்கப்பட்டது என்றால் வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணங்கள் எழுதிய மறுநாளே சுவாதீனம் கொடுத்தார்கள்

அன்றையதேதியில் இருந்து விவசாயம் செய்யப்பட்டது. வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணங்கள் எழுதியதற்கு பின்னர் விவசாயம் செய்ததாக கூறியதற்கு ஆதரவாக ஆவணங்கள் உண்டா என்றால் ஆவணங்களை பார்த்தால் சொல்ல இயலும். தாவா சொத்து முழுவதையும் விவசாயத்திற்கு உட்படுத்திவிட்டோமா என்றால் உட்படுத்திவிட்டோம். கடைசியாக விவசாய வேலை செய்த பொழுது எத்தனை ஆட்கள் வேலை பார்த்தார்கள் என்றால் 15 பேர் வேலை பார்த்தார்கள். அவர்களுக்கு விவசாய கூலி கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். மேற்படி விவசாய கூலி கொடுத்தற்காக ஆவணங்கள் வைத்துள்ளோமா என்றால் ஆவணங்களை பார்த்தால் சொல்ல இயலும். வழக்கு சொத்தில் விவசாயம் செய்ததற்காக பூச்சி கொல்லி மருந்து மற்றும் உரம் எதுவும் வாங்கி உபயோகபடுத்தியுளோமா என்றால் ஆவணங்களை பார்த்தால் சொல்ல இயலும். சூர்யகாந்தி எத்தனை காலத்து பயிர் என்றால் 120 நாள் பயிர்.

9. சூர்யகாந்தி பயிரை 1 ஏக்கர் பயிரிட்டால் எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்றால் அது சொந்த உபயோகத்திற்காக தான் பயிரிட்டோம். கரும்பு பயிரிட்டதற்கு எந்த நிறுவனத்தோடு ஒப்பந்தம் செய்திருந்தோம் என்றால் சொந்தமாக ஆலையில் அரைத்து கொண்டோம். மேற்படி கரும்பு பாகு எதற்காக பயன்படுகிறது என்றால் மஞ்சள்காமலைக்கு பயன்படுத்தப்படுகிறது. 30 ஏக்கரில் எவ்வளவு பாகு கிடைக்கும் என்றால் குறிப்பாக சொல்ல இயலாது. மேற்படி கரும்பு பாகினை எங்கு எடுத்து சென்றோம் என்றால் எங்கும் எடுத்து செல்லவில்லை. தாவா சொத்திலேயே மேற்படி கரும்பு பாகினை மருத்துவத்திற்காக புதைத்து வைத்துக்கொண்டோம். எவ்வளவு நாட்கள் புதைத்து வைக்கவேண்டும் என்றால் குறிப்பாக கூற இயலாது. கடைசியாக எப்பொழுது கரும்பு பாகினை எடுத்தோம் என்றால் 2015ம் ஆண்டு கடைசியில் எடுத்தோம். மேற்படி பாகை எங்கு எடுத்து சென்றோம் என்றால் அங்கேயே மருத்து தயாரித்துக்கொண்டோம்.

10. மருத்து தயாரிப்பதற்காக தாவா சொத்தில் ஆய்வு கூடங்கள் உள்ளதா என்றால் தேவையில்லை. வழக்கு சொத்தில் நாங்கள் அனுபத்திலும் இல்லை என்றாலும், கரும்பு பாகை தயாரித்தாக கூறுவதும் அதனை பூமியில் புதைத்து வைத்தியிருந்ததாக கூறுவதும் உண்மையில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சொத்தில் இருந்து கிடைக்கபெற்றதாக கூறக்கூடிய மருந்தினை வேறு எங்கும் எடுத்து செல்வோமா என்றால் இல்லை. அங்கு வரும் நபர்களுக்கு கொடுப்போம். அவ்வாறு யார், யார் அங்கு வந்தார்கள் என்பதற்கான ஆவணங்கள் உண்டா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணங்கள் எழுதப்பட்டதாக கூறக்கூடிய அன்று ராஜகோபால் வேறு ஆவணங்கள் எதுவும் எங்களுக்கு கொடுத்தாரா என்றால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணங்கள் ஏற்படுவதற்கு முன்னர் நாங்கள் ஆவணங்கள் எதுவும் ராஜகோபாலிடம்

கேட்டோமா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணங்கள் ஏற்படுவதற்கு முன்னர் மேற்படி வழக்கு சொத்தில் பயிர் செய்யும் பட்சத்தில் எங்களது அறக்கட்டளையின் நோக்கத்தின் படி மூலிகை செடிகள் வளருமா என்பதற்காக நிபுணர்கள் யாரையும் விசாரித்தோமா என்றால் இல்லை.

11. தாவா சொத்தில் விவசாயம் செய்யும்பட்சத்தில் எவ்வளவு வருமானம் கிடைக்கும் என யாரையும் கேட்டோமா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணங்கள் ஏற்படுவதற்கு முன்னர் வாதி அறக்கட்டளையில் தீர்மானம் ஏற்றப்பட்டதாக என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்ல இயலும். வா.சா-ஆ.6 மற்றும் 7 ஆவணத்தில் இரண்டாவது பிரதிவாதியான தனலட்சுமி கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அவரிடம் நாங்கள் ஏன் கையெழுத்து வாங்கவில்லை என்றால் அவர் டிரஸ்டி இல்லை என்பதால் கையெழுத்து வாங்கவில்லை. மேற்படி முதல் பிரதிவாதி வைத்துள்ள அறக்கட்டளைக்கு ராஜகோபால் மட்டும் தான் டிரஸ்டி-யா என்றால் வேறு யாரும் இருக்கலாம். முதல் பிரதிவாதியின் அறக்கட்டளையில் வேறு டிரஸ்டி யாரும் இருக்கிறார்களா என்று நாங்கள் விசாரித்தோமா என்றால் ராஜகோபால் பெரிய பண்ணையார் என்பதால் விசாரித்துக்கொள்ளவில்லை. மேற்படி வழக்கு சொத்தை 35 ஆண்டு காலம் குத்தகைக்கு பேசியதற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா-ஆ.5 ஆவணத்தின்போது எங்களது அறக்கட்டளையில் இருந்து தீர்மானம் எதுவும் இயற்றப்பட்டதா என்றால் இல்லை. 35 ஆண்டுகாலம் போதாது என்பதற்காக கடிதம் எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை நேரடியாக தான் சொன்னோம்.

12. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.5 ஆவணம் தபாலில் வந்ததா என்றால் தெரியாது. மேற்படி வா.சா.ஆ.5 ஆவணம் எழுதிய சமயத்தில் எங்கு இருந்தார் என்றால் தெரியாது. வா.சா.ஆ.5 ஆவணம் ராஜகோபால் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதியின் அறக்கட்டளையில் இரண்டு டிரஸ்டியும் சேர்ந்து எந்த வித பராதீனமும் செய்யாமல் நிர்வாகம் செய்யவேண்டும் என்று அறக்கட்டளை ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. ராஜகோபாலுக்கு மேற்படி வழக்கு சொத்தை தனிப்பட்ட முறையில் வில்லங்கம் செய்ய எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எங்களது அறக்கட்டளையும், முதல் பிரதிவாதியின் அறக்கட்டளையும் பொது அறக்கட்டளை என்பதால் நீதிமன்றத்தில் வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணங்கள் ஏற்படுவதற்கு நீதிமன்றங்களில் முன் அனுமதி எதுவும் பெற்றுள்ளோமா என்றால் தனியார் அறக்கட்டளை என்பதால் தேவையில்லை என ராஜகோபால் சொன்னார். வாதியின் அறக்கட்டளை பொது அறக்கட்டளை என்றால் சரிதான்.

13. முதல் பிரதிவாதியின் அறக்கட்டளை எதற்காக தொடங்கப்பட்டது என தெரியுமா என்றால் தெரியாது. முதல் பிரதிவாதியின் அறக்கட்டளை பொது அறக்கட்டளை என்றாலும் அவ்வகையில் வழக்கு சொத்தை ராஜகோபால் 98 ஆண்டுகள் குத்தகைக்கு விடுவதற்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எக்காலத்தில் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.02.13 17:50:15 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.